செய்தி வெளியீடு எண்: 041 நாள்: 15.01.2020

# தமிழ் வளர்ச்சித் துறை

## செய்திக் குறிப்பு

## திருவள்ளுவர் திருநாள் மற்றும் தமிழ்நாடு அரசின் விருதுகள் வழங்கும் விழாவில் வழங்கப்படும் விருதுகளுக்கான விருதாளர்கள் பெயர்கள் அறிவிப்பு

தமிழ் மொழி மற்றும் இலக்கிய வளர்ச்சிக்கும் தமிழ்ச் சமுதாய உயர்வுக்கும் தொண்டாற்றிப் பெருமை சேர்த்த தமிழ்ப் பேரறிஞர்கள் மற்றும் தன்னலமற்ற தலைவர்கள் பெயரில், தமிழ்நாடு அரசு பல்வேறு விருதுகளை ஏற்படுத்தியுள்ளது. அவ்வகையில் திருவள்ளுவர் திருநாள் விருதுகள் மற்றும் சித்திரைத் தமிழ்ப் புத்தாண்டு விருதுகளுக்கான விருதாளர்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி** அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

அவ்வகையில், **திருவள்ளுவர் திருநாள் விருதுகளாக:** 2020ஆம் ஆண்டிற்கான திருவள்ளுவர் விருது **திரு. ந. நித்தியானந்தபாரதி** அவர்களுக்கும் 2019ஆம் ஆண்டிற்கான தந்தை பெரியார் விருது **திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்** அவர்களுக்கும் அண்ணல் அம்பேத்கர் விருது **முனைவர் க. அருச்சுனன்** அவர்களுக்கும் பேரறிஞர் அண்ணா விருது **முனைவர் கோ. சமரசம்** அவர்களுக்கும் பெருந்தலைவர் காமராசர் விருது **கவாலியர் முனைவர் மா.சு.மதிவாணன்** அவர்களுக்கும் மகாகவி பாரதியார் விருது **பேராசிரியர் முனைவர் ப.சிவராஜி** அவர்களுக்கும் பாவேந்தர் பாரதிதாசன் விருது **திரு. த. தேனிசைசெல்லப்பா** அவர்களுக்கும் தமிழ்த்தென்றல் திரு.வி.க. விருது **முனைவர் சே.சுந்தரராசன்** அவர்களுக்கும் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது **மருத்துவர் மணிமேகலை கண்ணன்** அவர்களுக்கும் வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.

மேலும், மாண்புமிகு மேனாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் சித்திரை முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டை சிறப்பிக்கும் வகையில் தமிழுக்கும் தமிழ் இலக்கியத்திற்கும் வளம் சேர்க்கும் தமிழ் அறிஞர்களுக்கும் மற்றும் தமிழ் அமைப்புகளை ஏற்படுத்தி தமிழ்நாட்டிலும் பிற மாநிலங்களிலும் அயல்நாடுகளிலும் தமிழர் பண்பாடு, தமிழர் நாகரிகம் ஆகியவற்றை போற்றிப் பாதுகாக்கும் வகையில் செயலாற்றி வரும் சிறந்த தமிழ் அமைப்புகளுக்கும் விருதுகள் வழங்கத்தக்க வகையில் விருதுகள் தோற்றுவிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து **மாண்புமிகு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களாலும் ஆண்டுதோறும் தமிழறிஞர்களின் பெயரில் புதிய விருதுகள் தோற்றுவிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

அவ்வகையில் **சித்திரைத் தமிழ்ப் புத்தாண்டு விருதுகளாக:** 2019ஆம் ஆண்டிற்கான தமிழ்த்தாய் விருது **சிகாகோ தமிழ்ச் சங்கத்திற்கும்** கபிலர் விருது **புலவர் வெற்றியழகன்** அவர்களுக்கும் உ.வே.சா விருது **திரு. வே. மகாதேவன்** அவர்களுக்கும் கம்பர் விருது **முனைவர் சரசுவதி இராமநாதன்** அவர்களுக்கும் சொல்லின் செல்வர் விருது **சிந்தனைக் கவிஞர் முனைவர்**

**கவிதாசன்** அவர்களுக்கும் உமறுப்புலவர் விருது **திரு. லியாகத் அலிகான்** அவர்களுக்கும் ஜி.யு.போப் விருது **திரு. மரிய ஜோசப் சேவியர்** அவர்களுக்கும் இளங்கோவடிகள் விருது **கவிக்கோ ஞானச்செல்வன் (எ) கோ. திருஞானசம்பந்தம்** அவர்களுக்கும் அம்மா இலக்கிய விருது **திருமதி உமையாள் முத்து** அவர்களுக்கும் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் விருது **திரு. அசோகா சுப்பிரமணியன் (எ) சோ.கா. சுப்ரமணியன்** அவர்களுக்கும் மறைமலையடிகளார் விருது **புலவர் ப. முத்துக்குமாரசுவாமி** அவர்களுக்கும் அயோத்திதாசப் பண்டிதர் விருது **புலவர் வே. பிரபாகரன்** அவர்களுக்கும் சிறந்த மொழிப்பெயர்ப்பாளர் விருது **திரு. சா. முகம்மது யூசுப், திரு.க.ஜ. மஸ்தான் அலி, பேராசிரியர் சிவ. முருகேசன், முனைவர் ந. கடிகாசலம், திரு. மரபின் மைந்தன் (முத்தையா), திருமதி வத்சலா, மருத்துவர் முருகுதுரை, திரு. மாலன் (எ) வே. நாராயணன், திருமதி கிருசாங்கினி (எ) பிருந்தா நாகராசன், திரு.அ. மதிவாணன்** ஆகிய பத்து பேருக்கும் மற்றும் 2018ஆம் ஆண்டிற்கான முதலமைச்சர் கணினித் தமிழ் விருது **முனைவர் த. நாகராசன்** அவர்களுக்கும் **மதுரை, உலகத் தமிழ்ச் சங்க விருதுகளாக:** 2019ஆம் ஆண்டிற்கான இலக்கிய விருது **மலேசிய நாட்டைச் சேர்ந்த திரு. பெ. இராசேந்திரன்** அவர்களுக்கும், இலக்கண விருது **பிரான்சு நாட்டைச் சேர்ந்த திருமதி முத்து கஸ்தூரிபாய்** அவர்களுக்கும் மொழியியல் விருது **இலங்கை நாட்டைச் சேர்ந்த முனைவர் சுபதினி ரமேஷ்** அவர்களுக்கும் வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு **முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி** அவர்களால் மேற்குறிப்பிட்ட விருதுகள் திருவள்ளுவராண்டு 2051, தைத் திங்கள் 6ஆம் நாள், 20.01.2020 திங்கள் கிழமை அன்று காலை 10.00 மணிக்கு சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெறும் தமிழ்நாடு அரசின் திருவள்ளுவர் திருநாள் மற்றும் தமிழ்நாடு அரசின் விருதுகள் வழங்கும் விழாவில் வழங்கப்பட உள்ளன.

விருது பெறுவோர் ஒவ்வொருவருக்கும் விருதுத்தொகையாக 1 இலட்சம் ரூபாயும் தமிழ்த்தாய் விருது பெறும் தமிழ் அமைப்பிற்கு 5 இலட்சம் ரூபாயும் வழங்கப்படும். மேலும், இவர்களுக்கு விருதுக்கான தகுதியுரை வழங்கியும் பொன்னாடை அணிவித்துச் சிறப்பிக்கப்படும்.

**தமிழ் வளர்ச்சி இயக்குநருக்காக**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**